26th March 1969]

முன்னேற்றத்தில் நாட்டமுள்ளவராகவும் கடன் தீர்வுத் திறனுள்ள வராகவும் இருக்க வேண்டும். அவர். அரசின் அல்லது உள்ளாட்சி மன்றத்தின் முழு நேர ஊழியராக இருக்கக்கூடாது. தமிழ் நாடு கல்வி விதிகளில் இடை நிலைப் பள்ளிகளின் தொடர்பாளர்களுக்கு அத்த கைய தகுதிகள் விதிக்கப்படவில்லை.

(இ) ஆம். 1944-ல்.

(உ) விதிகளின் கீழ் நடவடிக்கை எதுவும் எடுக்க இயலாது.

**திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை :** தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளி நிர்வாகிகளுக்குக் குறைந்த பட்ச தகுதி அமைக்கப்படாததன் காரணமாகக் குற்றங்களுக்கு உட்பட்டவர்கள், பல லட்ச ரூபாய்கள் மானியங்களைக் கையாடல் செய்யும் நிலைமை எல்லாம் ஏற்படுகிறது. நான் குறிப்பிட்டுள்ள தொழிலாளர் நல உரிமைக் கழக உயர்நிலைப் பள்ளியில், நிர்வாகியினுடைய தவறின் காரணமாக, தவருன போக்கினுல், அங்கே மாணவர்கள் அமைதியின்மை, ஆசிரியர்கள் அமைதி யின்மை, போராட்டம் போன்றவைகள் எல்லாம் நடைபெறுவதை அர சாங்கம் அறிந்திருக்கும். ஆகையால் அவற்றைத் தவிர்க்கும் வகையில் என்ன நடவடிக்கை அரசாங்கம் எடுக்க உத்தேசித்திருக்கிறது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** விதிகள் இல்லாததால் திருட வேண்டுமென்பதில்லை. இந்தக் குறிப்பிட்ட விஷயத்தில் அவர் தவறு செய்து விட்டார். அதனுல் குற்றவாளியாக்கப்பட்டு தண்டிக்கப் பட்டிருக்கிருர். நம்முடைய விதிமுறைகளில் **(Grants-in-aid Board)** மூலமாகப் பள்ளிகளுக்கு உதவி செய்கிருேம். பணம் கொடுப் பதற்கு உரிமை இருக்கிறதே தவிர, இது போன்ற தவறுகள் நடைபெறும் போது, அதில் தலையிடுவதற்கு தற்போது போதுமான விதிகள் இல்லை என்று நானே உணருகிறேன். அதை மாற்றி அமைக்க ஒரு குழு அமைக்கத் தனியார் துறை பள்ளிகளுக்கும் அரசுக்கும் உள்ள தொடர்பை ஒழுங்குபடுத்த வேண்டுமென்று நினைக்கிருேம். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடந்தால், கிராண்டை நிறுத்தலாம். ஆனுல் அப்படிச் செய்வதால், மாணவர்கள் படிப்பு பாதிக்கப்படும். ஆகையால் அந்த மாதிரி .எதுவும் நடக்காமல் நிர்வாகத்தை சீரமைக்கும் வகை யில், சில மாற்றங்கள் வேண்டுமென்று அவைகளை ஆய்வதற்கு ஒரு குழு அமைக்க அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

## *The Madras Cultivating Tenants (Payment of Fair Rent) Act, 1956*

* 217 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of cases pending as on 1st June 1968, among the cases filed under the Madras Cultivating Tenants' (Payment of Fair Rent) Act, 1956; and

(*b*) the reason therefor ?

## நியாயவாரச் சட்டம்

**திரு. என். ஆர். தியாகராஜன் :** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மாவட்டத்தில் நியாய வாரச் சட்டத்தின் கீழ் **[The Madras Cultivating Tenants (Payment of Fair Rent) Act, 1956]** தொடரப்பட்ட வழக்குகள் 1—6—1968 அன்றுள்ளவாறு எத்தனை முடிவுருமல் இருக்கின்றன ?

(ஆ) காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) பதினாறு வழக்குகள்.

(இ) மேற்குறித்த பதினாறு வழக்குகளில் ஒன்பது வழக்குகள் முடிவு செய்யப்பெற்றுள்ளன. சில வழக்குகளில் மனுதாரர்களும் எதிர் மனுதாரர்களும், தங்களிடமுள்ள தஸ்தாவேஜுகளைச் சமர்ப்பிப்பதற்குத் தவணை கேட்டிருக்கின்றனர். எஞ்சியுள்ள எழு வழக்குகளையும் உடனடியாக முடிவு செய்வதாக சம்பந்தப்பட்ட வட்ட ஆட்சியர்கள் உறுதி அளித்துள்ளனர். அந்த வழக்குகளை விரைவில் முடிவு செய்வதற்கான பயனுள்ள நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அந்த வட்ட ஆட்சியாளர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

## *Sales Tax*

* 218 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there has been any discussion that the basis of Commercial Tax should be the same in all the Southern States, at the meeting of the Southern Regional Council held at Madras on 14th March 1967 ; and

(*b*) if so, the decision taken ?

## வணிக வரி

**திரு. என். ஆர். தியாகராஜன் :** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 14—8—1968 அன்று சென்னையில் நடந்த தென் மண்டல (Southern Regional Council) கூட்டத்தின்போது தென்னக மாநிலங்களில் ஒரே மாதிரி வணிக வரி முறை கையாள வேண்டும் என்பதைக் குறித்து பேசப்பட்டதா ?

(இ) ஆமெனில், என்ன முடிவு எடுக்கப்பட்டது ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** (அ) ஆம்.

(இ) மாநில அரசாங்கங்கள் தங்களிடையே தகவல்களைப் பரிமாற்றம் செய்துகொள்வதென்றும், கிழக்கு மண்டல, வடக்கு மண்டல வட்டார மன்றங்கள் பரிந்துரைத்த சரக்குகள் பட்டியல்களில் காணும் இனங்கள் எதையேனும் ஒரு சீரான வரிவிதிப்புக்கான சிறப்புச் சரக்குகள் பட்டியலில் சேர்த்துக்கொள்ள முடியுமா என்று பரிசீலிப்பதென்றும், மன்றத்தில் அடுத்த கூட்டத்தில் இதைச் சீர்தூக்கிப் பார்ப்பதென்றும் முடிவு எடுக்கப்பட்டது.

**திரு சா. கணேசன் :** தென்னகத்திலுள்ள பல்வேறு மாநிலங்களிலும், கிட்டத்தட்ட சுமார் நான்கு மாநிலங்களிலும், ஒரே குறிப்பிட்ட உற்பத்திக்கு வெவ்வேறு வகையான வணிக வரி முறை அல்லது அளவு வேறுபாடு இருப்பதால், நம்முடைய மாநிலத்தின் உற்பத்தியை அல்லது விற்பனையை அது பாதிக்கக் கூடியதாக அமைகிற நிலையை உணர்ந்து, எல்லா மாநிலங்களுக்கும் பொருத்தமாக நம்முடைய மாநிலத்தில் சிறிது குறைவாக வைத்தால், நம்முடைய மாநிலத்தின் விற்பனை வரி வருமானம் அதிகப்படும் என்பதை அரசு ஏற்றுக்கொள்ளுகிறதா ? அப்படி ஏற்றுக் கொண்டால் அதன் மீது என்ன செய்யவிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தையொட்டித்தான் நம்முடைய அரசாங்கம் செயல்படுகிறது. நம்முடைய தொழில் வளர்ச்சி, இங்கே இருக்கிற நிலைமைகள், அத்தோடு பிற மாநிலங்களில் இருக்கிற நிலைமைகள் எல்லாம் வெவ்வேறாக இருக்கலாம். நம்முடைய நிதி ஆதாரங்களை ஒரே சீராக வைப்பதை அரசாங்கம் ஒத்துக்கொள்ளவில்லை. இதைப்பற்றி